**தலைப்பு 265 - மன்னார் மாவட்ட செயலகம் / கச்சேரியின் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தலைப்பு 265 - மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 25 இல் மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 399.00 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 382.72 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டின் ரூபா 16.28 மில்லியன் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 4.08 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 212.00 | 198.00 | 14.00 | 6.60 |
| மூலதனம் | 187.00 | 184.72 | 2.28 | 1.22 |
| **மொத்தம்** | **399.00** | **382.72** | **16.28** | **4.08** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

24 அமைச்சுக்கள் மற்றும் 12 திணைக்களங்களினால் ரூபா 2,176.13 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,055.93 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. இதன்படி, ரூபா 120.20 மில்லியன் கூட்டுத்தொகையான அல்லது 5.52 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 26501 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 13.00 | 12.96 | 7.50 | 9.82 | 50.00 | 42.29 |

## 2.3 பொதுவைப்பு கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 07 பொது வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 97.10 மில்லியன் கூட்டுத்தொகையாகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பொது வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0001/0103/000 | 0.10 |
| 6000/0000/00/0017/0028/000 | 1.94 |

| | |
|---|---:|
| 6000/0000/00/0013/0098/000 | 28.50 |
| 6000/0000/00/0014/0017/000 | 3.44 |
| 6000/0000/00/0016/0089/000 | 55.58 |
| 6000/0000/00/0018/0093/000 | 0.19 |
| 6000/0000/00/0020/0016/000 | 7.35 |
| | --------- |
| **மொத்தம்** | **97.10** |
| | ==== |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இந்த அறிக்கையின் பந்தி 1.1 இல் தெரிவிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது. இந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் கணக்கேடுகளைப் பேணாமை

பின்வரும் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

| பதிவேடுகளின் வகைகள் | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| கட்லொக் புத்தகங்கள் | கச்சேரி கைநூல் 5:9 |
| நட்டப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| பெறுகை நேரப் பட்டியல் (பிரீஎஸ்) | அரச பெறுகை வழிகாட்டிகளின் - 2006 இன் 4.2.2 ஆம் வழிகாட்டி |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

இரண்டு மீண்டுவரும் செலவின விடயங்கள் மற்றும் இரண்டு மூலதன விடயங்கள் போன்றவற்றிற்காக ரூபா 8,227,757 மற்றும் ரூபா 2,240,420 கூட்டுத்தொகையான சேமிப்புக்களில் குறிப்பிடத்தக்களவு தொகை அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டில் 35 சதவீதமும் 75 சதவீதமும் முறையே சேமிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த சேமிப்புக்களுக்காக கொடுக்கப்பட்ட விளக்கங்கள் செயல்நிமித்த அடிப்படையில் பாதிடப்பட்ட மதிப்பீட்டினை தயாரித்தல் மற்றும் முறையான பெறுகைத் திட்டத்தை தயாரிக்காமையால் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**3.3 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான புத்தகங்களில் காட்டப்பட்ட வைப்புக் கணக்கின் மீதிக்கும் திறைசேரி கணனி அச்சிட்டுத்தாளின் மீதிக்கும் இடையில் ரூபா 31,375 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. எனினும், மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கீட்டில் காட்டப்பட்ட வித்தியாசமோ அல்லது வித்தியாசத்திற்கான காரணமோ கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒன்று தொடக்கம் மூன்று வருடங்கள் வரையான காலப்பகுதிக்காக வைப்புக் கணக்கிலிருந்த ரூபா 3 மில்லியன் காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து 01 தொடக்கம் 17 வருடங்கள் காலப்பகுதிக்கு மேலாக அறவிடப்படாமல் ரூபா 699,540 கூட்டுத்தொகையான முற்பண மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பொது வளங்களின் முறையான பயன்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமான 10 மோட்டார் சைக்கிள்கள், 02 கட்டிடங்கள் 01 தொடக்கம் 03 வருடங்களிற்கு மேலாக விளைவற்றிருப்பதிற்கும் குறைப்பயன்பாட்டிற்கும் உட்படுத்தப்பட்டது.

**3.6 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| | (i) நிதிப்பிரமாணம் 396 | 177,312 | வழங்கப்பட்டு கொடுப்பனவிற்கு 06 மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாத ரூபா 177,312 பெறுமதியான 53 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 757 | - | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளானது மாவட்டச் செயலகம் மற்றும் ஐந்து பிரதேச செயலகங்களினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட 04 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு ஒவ்வொரு ஆறு மாதங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) மன்னார் மாவட்ட செயலகத்திற்காக புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல்

மன்னார் மாவட்ட செயலகத்தின் நிர்மாணம் மீதான தாமதக் கட்டணமாக ரூபா 913,000 ஐ பதிவழிப்பதற்கு மாவட்ட பொறியியலாளர் வேண்டப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 456,500 மாத்திரம் கழிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) திருக்கேதீஸ்வரத்திலுள்ள முன்பள்ளியை நிர்மாணித்தல்

திருக்கேதீஸ்வரத்திலுள்ள முன்பள்ளி கட்டிடத்தின் நிர்மாண வேலையானது ரூபா 1.5 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நிர்மாணக் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய வேலையானது 2016 திசெம்பர் 11 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டும். எனினும், நிர்மாண வேலைகளானது 2017 ஒக்தோபர் 25 இலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் தாமதத்திற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரிப்பு மேற்கில் குழாய்க் கிணறை நிர்மாணித்தல்**

அரிப்பு மேற்கில் ஏற்கனவே பொது சாதாரண கிணறொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 242,600 கிரயத்தில் சுகாதார வசதிகளை வழங்கும் நோக்கத்திற்காக குழாய் கிணறொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஆகையால், இந்த நோக்கத்திற்காக பயன்படுத்திய நிதியம் பயனற்றிருந்தது. மேலும், நிர்மாணத்திற்கு சில மாதங்களில் நிர்மாணிக்கப்பட்ட குழாய் கிணறொன்றும் சேதமடைந்திருந்தது. இது தொடர்பில் முசலி மாவட்ட செயலகத்தால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) மறிச்சுக்கட்டியில் முன்பள்ளியொன்றை நிர்மாணம் செய்தல்**

மறிச்சுக்கட்டியில் முன்பள்ளியொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 989,000 தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடம் 2016 நவம்பர் 05 பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கட்டிடத்தின் முகப்பு மற்றும் மலசலகூடங்கள் வரைபுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமானது நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, கட்டிடமானது 2017 ஒக்தோபர் 25 வரையிலும் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்த முடிந்திருக்கவில்லை.

**(உ) தேவன்பிட்டியவில் பொது மண்டபமொன்றை நிர்மாணித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தால் தேவன்பிட்டியவில் புதிய மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தமானது 2016 செப்தெம்பர் 05 இல் கிராமிய அபிவிருத்தி சமூகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலையானது 2017 யூலை 06 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லையென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும், தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்ட போலி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முழுக்கொடுப்பனவும் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(ஊ) மேலதிகக் கொடுப்பனவுகள்**

பின்வரும் வேலைகளின் நிர்மாணத்திற்காக ரூபா 177,572 மேலதிக கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. வேலைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஒப்பந்தத்தின் பெயர் | பட்டியல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி | உண்மையாக நடைபெற்ற வேலைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் பெறுமதி | மேலதிகக் கொடுப்பனவுகளின் பெறுமதி |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| விடத்தல் தீவு உள்ளக வீதி | 639,268 | 616,042 | 23,226 |
| விடத்தல் தீவு மேற்கின் உள்ளக வீதி | 670,394 | 597,556 | 72,838 |
| தேவன்பிட்டிய பொது மண்டபம் | 57,200 | 45,920 | 11,280 |
| பனியா மலர் மாதாவின் உள்ளக வீதி | 70,228 | இல்லை | 70,228 |
| **மொத்தம்** | **1,437,090** | **1,259,518** | **177,572** |

**3.8 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

(அ) உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் சிபாரிசுகள் தொடர்பில் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மாதாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வின் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 20 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 01 | 16 |
| (iii) | இரண்டாம் நிலை | 350 | 257 | 93 |
| (iv) | ஆரம்ப நிலை | 55 | 37 | 18 |
| **மொத்தம்** | | **444** | **315** | **129** |

பல்வேறுபட்ட பதவிகளுக்காக 129 வெற்றிடங்களினை நிரப்புவதற்கு மனித வளங்களின் உண்மையான தேவைப்பாட்டினை மீளாய்வுசெய்த பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.